IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.140/2013
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Caste | : | |
| Father Name | : | தாமோதரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of November, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

21.08.1978 ல், 1974 ல் தனது தந்தையார் வாங்கிய சொத்தில் குறிப்பாக ஆதியம்மாளிடம் வாங்கிய சொத்து சர்வே எண்.274 மற்றும் 275 ஆகிய சொத்துக்களை கே.வி.குப்பம் Co–operative நிலவள வங்கியில் அடமானம் வைக்கும் போது நானும் அதில் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு நியாபகம் இல்லை. 1978 ல் எனது வயது 8 ஆகும். 1993 ல் சொத்து மீண்டும் ஆதியம்மாளிடம் விற்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த நேரத்தில் எனக்கு 1993 ல் எனக்கு 23 வயது என்பதால் எனக்கு உயில் பற்றி தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 1967 ல் சொத்து வாங்கப்பட்டு விற்கப்பட்டுவிட்டது அதனால் அப்போது தான் வழக்கு மூலம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1961 ல் எனது தாத்தா ராஜ்மேஸ்திரி சுயமாக சம்பாதித்த சொத்து என்று நான் குறிப்பிட்டுள்ள நிலையில் ஆனால் அவருடன் பிறந்த அப்புக்கான் என்பவருக்கும் இவருக்கும் ஏற்பட்ட பாகப் பிரிவினையாக வந்த சொத்து என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவா சொத்தானது கூட்டு உரிமை உடமை சொத்து அதாவது ( coporcenary) சொத்து சொன்னால் சரியல்ல. மேற்படி கூட்டு உரிமை உடமை சொத்து என்பதால் ராஜ்மேஸ்திரிக்கு யாருக்கும் சொத்தை தனிப்பட்ட முறையில் எழுதி வைப்பதற்கு உரிமை இல்லை

என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ராஜ்மேஸ்திரிக்கு சொத்தை சமமாக பிரித்து கொடுக்க வேண்டிய உரிமை மட்டுமே உள்ளது என்பதாலும் கூட்டு சொத்தை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ எழுதி கொடுப்பதற்கோ அல்லது செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது செல்லாது அல்லது மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. (மனுதாரர் வழக்கறிஞர் மோசடியானது என்ற வார்த்தை அவருடைய பதிலுரையில் குறிப்பிட்டு இல்லை என்ற காரணத்திற்காக மேற்படி கேள்விக்கு ஆட்சேபனை செய்யப்படுகிறது.) 1973ல் எழுதப்பட்ட உயிலானது தங்களுக்கு தெளிவாகவே தெரியும் என்பதற்கு என்னுடைய தந்தையாருடன் இணைந்து நடந்த பரிவர்த்தனைகளே சான்றாகும் ஆனால் குறிப்பிட்ட காலவரையரையில் மறைப்பதற்காக நான் எனக்கு எதுவும் தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 170/2000 மற்றும் 120/2000 ஆகிய வழக்குகள் தோன்றா தரப்பினராக தள்ளுபடி செய்யப்பட்டது என்பது பாகப்பிரிவினை வழக்கை பொறுத்தமட்டில் வழக்கு மூலத்தை பாதிக்காது அது தொடர்ச்சியானது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தோன்றா தரப்பினராக தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கானது இறுதி வரை விசாரணை செய்து முடித்து தீர்ப்பு சொல்லப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 23.11.1972 மற்றும் 25.11.1972 ஆகிய தேதிகளில் இரண்டு செட்டில்மெண்ட் பத்திரத்தை சாம்பசிவத்திற்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் ஆமாம் அதனால் அந்த வழக்கு மூலம் ஏற்பட்ட நபரான சாம்பசிவத்தை இந்த வழக்கில் இணைக்காமல் இருந்ததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அவர் தான் என்னிடம் வழக்கில் சேர்க்காதே ஆவணத்தை வைத்து வழக்கை நடத்து என்று

கூறினார். அதற்கு சாட்சியம் உண்டா என்று சொன்னால் இல்லை. எனது தந்தை தாமோதரன், ஆதியம்மாள் மீது வழக்கு எண்.25/1994 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு எனது தந்தையாருக்கு எதிராக அமைந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. (மேற்கண்ட கேள்வியானது பதிலுரையில் இல்லாமல் குறிப்பாக அதை கேட்க முடியாது என்று வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்படுகிறது.)

(குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI